**முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்**

**O.S.No.44/2017**

**சாட்சியின் சான்றுரை DW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | ராமலிங்கம் | வட்டம் | - | |
| த/பெ | - | சுப்பிரமணியன் | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

23.06.2023 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி என்னால் உறுதிமொழி கொடுத்து சாட்சியமளிக்கப்பட்டது.

பிரதிவாதி சாட்சி 1 வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**வாதிதரப்பில் குறுக்குவிசாரணை**

எனக்கு 79 வயது ஆகிறது. எனக்கு தமிழ் எழுதபடிக்க தெரியும். எனக்கும் எனது சகோதரர்களுக்கும் பூர்விக விக்கிரவாண்டி என்றால் எனக்கு தெரியாது. பவுனாம்பாள் போட்ட எதிர்வழக்குரையில் உள்ள சங்கதிகள் யார் சொல்லிக்கொடுத்தது என்றால் நான் ரெக்கார்டில் எழுதி வைத்ததை கொடுத்தேன். வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது. இதில் உள்ள சங்கதிகள் யார் சொல்லி தயார் செய்தது என்றால் ரெக்கார்டில் வைத்ததை நான் சொல்கிறேன். வாக்குமூலத்தில் உள்ளதை படித்து தெரிந்துகொண்டேனா என்றால் சிலது தெரியும் சிலது தெரியாது. எனது வாக்குமூலத்தில் தாவா சொத்து சபாபதி ஆச்சாரி பெயரில் 1896ல் பெறப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் வேலாயுதம் ஆச்சாரி பெயரில் வாங்கி சபாபதி ஆச்சாரி பெயரில் எழுதினார். அந்த சபாபதி ஆச்சாரி பெயரில் உள்ளது என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் அந்த பத்திரத்தை பற்றி எனக்கு தெரியாது.

வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் ஆனால் பத்திரத்தை பார்க்கவில்லை. நீதிமன்ற நோட்டிசில் எங்களுக்கு பாகம் இல்லை என்று சொன்னார்கள். எனது வாக்குமூலத்தில் 2வது பக்கத்தில் சபாபாதி ஆச்சாரி பெயரில் சொத்து வாங்கப்பட்டுள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சபாபதி ஆச்சாரியின் மகன் வைதி ஆச்சாரி என்றால் சரிதான். அவர் மகன் பரமசிவம் ஆச்சாரி என்றால் சரிதான். ஆனால் அதெல்லாம் ரெக்கார்டு பார்த்து தான் சொல்கிறேன் எனக்கு நேரடியாக தெரியாது. பரமசிவ ஆச்சாரியின் மகன் 1ம் பிரதிவாதி முருகன் என்றால் சரிதான். முருகனின் அத்தை வாதி பவுனாம்பாள் என்றால் தெரியாது. பரமசிவ ஆச்சாரியின் தம்பி நடேச ஆச்சாரி என்றால் சரிதான். நடேச ஆச்சாரியின் மகன்கள் தான் சக்திவேல், இளங்கோ 2,3 பிரதிவாதிகள் என்றால் சரிதான். நடேச ஆச்சாரிக்கு அடுத்தது ஆறுமுகம் ஆச்சாரி என்றால் சரிதான். ஆறுமுகம் ஆச்சாரியின் பிள்ளைகள் தான் பரந்தாமன், மணிவாசகம் பிரதிவாதிகள்4,5 என்றால் சரிதான். ஆறுமுகம் ஆச்சாரிக்கு அடுத்தது சீனிவாசன் ஆச்சாரி என்றால் சரிதான். அவர்கள் மகன்கள் மஞ்சுநாதன், ஆனந்தன் பிரதிவாதிகள் 6,7 என்றால் சரிதான். வைத்தி ஆச்சாரிக்கு கடைசியாக பிறந்தவர் தான் பவுனாம்பாள் என்றால் அவர் யார் என்றே எனக்கு தெரியாது. எனக்கு தெரியும் என்றும் வழக்கிற்காக உண்மைக்கு புறம்பாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பரமசிம் ஆசாரி, சீனிவாச ஆசாரி, நடேச ஆசாரி, ஆறுமுகம் ஆசாரி ஆகியோரின் தந்தை வைத்திய ஆசாரி என்றால் சரிதான். வைத்திய ஆசாரி தந்தை சபாபதி ஆசாரி என்றால் எனக்கு தெரியாது. எனது வாக்குமூலத்தில் சபாபதி ஆசாரியின் வாரிசுகள் வைத்திய ஆசாரி, பொன்னுசாமி ஆசாரி ஆகியோர்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் நான் பார்த்தது இல்லை. சொல்கேள்வி தான். வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது

அனைத்தும் உண்மையா அல்லது உண்மைக்கு புறம்பானதா என்றால் எனக்கு தெரிந்ததை தான் சொல்லியுள்ளேன். எனது வாக்குமூலத்தில் வழக்கு சொத்தில் சபாபதி ஆசாரியின் வாரிசுகள் கீழ்புறம் 4½ சென்ட் பாத்தியம் என்று சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு அதை பற்றி தெரியவில்லை. வழக்கு சொத்திற்கு பாத்தியம் உள்ளது என்று சொல்வதற்கு ஆவணங்கள் கொடுத்துள்ளேன் என்றால் பழனி ஆசாரி, அவர் தந்தை வேலாயுதம் ஆசாரி அவர்கள் பெயரில் உள்ள ரசீதுகளை கொடுத்துள்ளேன். சபாபதி ஆசாரியின் அப்பா பெயர் தெரியுமா என்றால் தெரியாது. எனது வாக்குமூலத்தில் சபாபதி ஆசாரியுடன் 4 பேர் பிறந்ததாக சொல்லியுள்ளேன் என்றும் அதில் 3 பேர் திருமணம் ஆகாமல் இறந்துவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவர்கள் எப்போது இறந்தார்கள் ந்த ஊரில் இறந்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. வேலாயுத ஆசாரி என் அப்பாவின் பாட்டனார் அவர் எப்போது இறந்தார் என்றால் 1933ல் இறந்தார் அதற்கு கல்வெட்டு உள்ளது. என் பாட்டனார் பெயர் பழனி ஆசாரி ஆகும். வாக்குமூலத்தில் சபாபதி ஆசாரியின் சகோதரர் தான் வேலாயுதம் ஆசாரி என்று சொல்லியுள்ளேன் என்றும் அதற்கான ஆதாரம் கொடுத்துள்ளேன் என்றால் கொடுத்துள்ளேன். அதற்கு என்ன ஆவணம் கொடுத்துள்ளேன் ரசீது கொடுத்துள்ளேன். சுப்பிரமணிய ஆசாரியுடன் பிறந்த முருகேசன் ஆசாரி என்று சொல்லியுள்ளேன் என்றும் அவர் எப்போது இறந்தார் என்றால் தெரியாது. பழனி ஆசாரி எப்போது இறந்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. எனது வாக்குமூலத்தில் பாரா 3ல் 1 முதல் 25 வரியில் உள்ள விவரங்கள் எனது ஆட்சேபனையில் இல்லை என்றும் அதை வாக்குமூலத்தில் போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கில்போட்ட ஆட்சேபனையில் இல்லாத சங்கதிகளை சொல்லி வாக்குமூலம் போட்டதால்

அவை நிராகரிக்க தக்கவை என்றால் சரியல்ல. மேற்சொன்ன 1 முதல் 25 வரிகளில் உள்ள சங்கதிகளுக்கான வரிகளுக்கான விவரம் நீதிமன்றத்தில் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. வாய்தா ரசீது தான் ஆதாரம். நான் எந்த வித ஆதாரமும் கொடுக்கவில்லை என்றும் புதிதாக விவரம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாக்குமூலத்தில் 90 ஆண்டுகளாக சொத்தை அனுபவித்து வருகிறேன் என்று சொல்லியுள்ளேன் என்றும் அதற்கான ஆதாரங்கள் நீதிமன்றத்தில் கொடுத்துள்ளேனா என்றால் ரசீது கொடுத்துள்ளேன். எனது வாக்குமூலத்தில் சபாபதியின் வாரிசகளுக்கு 4½ சென்ட் கீழ்புறத்தில் உள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றும் அதற்கு சபாபதியிடம் என் பாட்டனார் கிரையம் வாங்கியதற்கான ஆதாரம் உள்ளதா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அதுபோல எதுவும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றும் நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பவுனாம்பாள் 1896 சபாபதி ஆசாரி வாங்கியதற்காக பத்திரம் போட்டுள்ளார் என்றால் எனக்கு வரவில்லை. சொத்து எங்களுடையது தான் என்பதற்காக பத்திரங்கள் எதுவும் போட்டுள்ளேனா என்றால் 4½ சென்டிற்கு பத்திரம் உள்ளது அதை கொடுத்துள்ளேன். அவ்வாறு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொத்திற்காக வருவாய் ஆவணங்கள் மட்டும் போட்டுள்ளேன் என்றால் சரிதான். பதிவு ஆவணங்கள் எதுவும் போடவில்லை என்றால் சரிதான். பரமசிவம், சீனிவாசன் ஆசாரி ஆகியோர் அசல் வழக்கு 846/1990 என்ற வழக்கின் டிகிரி காபியை போட்டுள்ளேன் என்றும் அந்த வழக்கில் பவுனாம்பாள் தரப்பினர் இல்லை என்பதாலும் அந்த வழக்கு சட்டப்படி அவரை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. அதேபோல் மேல்முறையீடு செய்ததாகவும் அதன் நகலையும் 18/1995 என்ற வழக்கின் தீர்ப்பயையும்

போட்டுள்ளேன் என்றும் அதிலும் பவுனாம்பாள் தரப்பினர் என்றும் அதனால் அந்த வழக்கின் தீர்ப்பும் அவரை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. பரமசிவம் போட்டுள்ள வழக்கை நான் எதிர்வாதி என்றும் அவர்கள் மேல்முறையீடு செய்தார்கள் என்றால் சரியல்ல. அந்த வழக்கு நடக்கும் போது பவுனாம்பாள் பெங்களூரில் இருந்தார்கள் என்றால் தெரியாது. அவர்கள் யார் என்றே தெரியாது. வேலாயுத ஆசாரியும் சபாபதி ஆசாரியும் சகோதரர்கள் என்றும் அவர்கள் பெண் கொடுத்துள்ளார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவர்கள் யாரோ என் பாட்டனாரையே எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கு முன்புறத்தில் சீமை ஓடு போட்ட ஒரு கட்டிடம் உள்ளது என்றால் சரிதான். அதற்கு மின் இணைப்பும் உள்ளது என்றால் உள்ளது. அதை நான் தான் கட்டி கொடுத்தேன். சக்திவேலுக்கு கட்டிகொடுத்தேன்.(2ம் பிரதிவாதி) தற்போது அந்த வீட்டை வாடகைக்கு கொடுத்துவிட்டார். வாதி பவுனாம்பாள் மற்றும் 1 முதல் 8 பிரதிவாதிகள் இந்த குடும்பத்திற்கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. தொடர்பு உள்ளது. வழக்கு எனக்கோ என் சகோதருக்கோ உரிமையோ பாத்தியமோ இல்லை என்றால் சரியல்ல. நான் தான் ஆண்டு அனுபவித்து வருகிறேன். நான் 1984க்கு முன்பு இருந்தே நான் விவரம் தெரிந்ததிலிருந்து நான் தான் அனுபவித்து வருகிறேன். யூடிஆர் பட்டா கொடுப்பதற்கு முன்பே அனுபவித்து வருகிறேன். அவ்வாறு சொல்வது வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு சொல்லவேண்டிய அவசியம் இல்லை. என் தம்பிகள் சக்திவேல், கண்ணன் வெவ்வேறு இடத்தில் குடியிருக்கிறார்கள் தாவா சொத்தில் இல்லை என்றால் சரிதான். வாதி இந்த சொத்தை நான் ஆக்கிரமிப்பு செய்துவிட்டேன் என்று சொல்வது சரியல்ல. வழக்கின்

ஆட்சேபனையில் அனுபவ பாத்தியத்தின் மூலம் சித்தித்துவிட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அது தானமாகவோ, பாகமாகவோ, கிரையமாகவோ வந்தது என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. 16.06.1978ல் கட்டபஞ்சாயத்து அடமானம் எழுதி கொடுத்ததாகவும் அதை நான் பைசல் செய்ததாகவும் சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு தெரியவில்லை. அதற்கு ஆதாரமாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது வாக்குமூலத்தில் 12.06.1948ல் நாராயணகவுண்டருக்கும் ரத்தினகவுண்டருக்கும் குத்தகைக்கு விட்டு அனுபவித்து வந்ததாக சொல்லியுள்ளேன் என்றும் அதற்காக ஆதாரம் போட்டுள்ளேனா என்றால் போட்டுள்ளேன். அவ்வாறு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவீல்லை என்றால் சரிதான். 1 முதல் 8 பிரதிவாதிகள் ouster மூலம் அனுபவித்து வந்ததாகவும் அனுபவித்து சித்தித்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது வாக்குமூலத்தில் மேற்புறம் உள்ள 4½ சென்ட் நாங்கள் மூவரும் அனுபவித்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 9 சென்ட் எங்களுக்கு பாகம் என்று சொல்லியுள்ளேன் என்றும் அந்த மீதி 4½ சென்ட் எவ்வாறு வந்தது என்றால் அந்த 9 சென்ட் நிலமும் எனது அனுபவத்தில் தான் உள்ளது. எதிரே உள்ள புறம்போக்கு நிலமும் எனது கட்டுபாட்டில் தான் உள்ளது. மீதி 4½ சென்ட் எவ்வாறு வந்தது என்று விளக்கம் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். நான் முன்னுக்கு பின் முரணாக எதிர்காட்சியாகி வருவதால் எனக்கும் என் சகோதரர்களுக்கும் சொத்திற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. அதில் கட்டிடம் கட்டி அனுபவித்து வருகிறேன். பிவா.சாஆ4 ஐ நான் தாக்கல் செய்கிறேன். அது வாய்தா ரசீது. இது வாய்தா ரசீதும் கிடையாது, பட்டாவும் கிடையாது என்றால் இது யூடிஆர் பட்டா 1984ல்

கொடுத்தது. இது சர்வே நோட்டிஸ் என்றால் எனக்கு தெரியாது. பி.வா.சாஆ5 பட்டா ஆகும். இது யார் கொடுத்தார் என்றால் மாவட்ட ஆட்சியர் கொடுத்தார். சாட்சி தானாக தாசில்தார் கொடுத்த பட்டா என்கிறார்,. இது சம்மந்தமாக விசாரணை செய்தார்களா என்றால் நீதிமன்றத்தி விசாரித்தார்கள். அப்போது 1977 exparte ஆகிவிட்டது. அதற்கு பிறகு சப்டிவிசன் செய்தோம். அதுபோல் அவணம் எதுவும் தாக்கல் செய்யவீல்லை ள்ன்றால் சரியல்ல. அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சாஆ6 என்ன ஆவணம் என்றால் மாவட்ட தொழில் மையத்தில் கடை வைத்ததற்காக எனக்கு வழங்கப்பட்ட ஆவணம். அது தொழில் செய்வதற்காக கொடுத்த உரிமம் என்றால் சரிதான். அது சொத்தை நிரூபிக்ககூடிய ஆவணம் என்றால் சரியல்ல.

Sd/- R.Poornima,
Principal Sessions Judge,
Villupuram.